விலை ரூபா 1-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 29 தை 18 ஜ. ஆகிர் பிறை 12 இதழ் 247

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 1-2-1988

## எம்.ஜி. ஆரை கௌரவித்து ஈழம் எழுப்பும் முதல்சிலை!

[யாழ்ப்பாணம்]

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும் புரட்சித் தலைவருமான பொன்மனச்செம்பல் அமரர் எம்.ஜி. ராமச்சந்திரனின் சிலை திறப்பு விழா இன்று குருநகரில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அமரர் எம். ஜி. ஆர் மறைந்த நாற்பதாவது தினத்தையொட்டி இன்று மேற்படி சிலை திறப்பு விழா நிகழ்ச்சியை இலங்கை அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் மேற்கொண்டுள்ளது.

இன்றையதினம் அமரர் எம். ஜி. ஆருக்கு சென்னை மரீனாசடற்கரையில் அறிஞர் அண்ணாவின் சிலைக்கருகில் சிலை பொன்றும் திறந்து வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

புரட்சித் தலைவர் அமரர் எம் ஜி ஆர் ஈழத்தமிழருக்கு

[5-ம் பக்கம் பார்க்க]

# சட்ட சபை கலைக்கப்பட்டது!

# தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சி!

## 3 மாதத்தில் தேர்தல்?

(நமது அரசியல் நிருபர்)

**தமிழ்நாடு மாநில சட்டசபைகலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.**

**இப்பிரகடனத்தையடுத்து, விரைவில் இங்கு சட்டசபைத் தேர்தல் நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.**

கடந்த டிசம்பர் மாதம் 24ம் திகதி தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி இராமச்சந்திரன்காலமானதையடுத்து தமிழக ஆளும் கடசியினர் குழப்பமடையத் தொடங்கியதும்யக ந்த ஜனவரி இரண்டாந்திகதி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் இரு பிரிவுகளாக பிளவுபட்டதும் தெரிந்ததே.

ஒரு பிரிவு மறைந்த முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரனின் பாரியார் திருமதி. ஜானகி இராமச்சந்திரன் தலைமையின் கீழேயும், மற்றைய பிரிவு அ. தி மு. க வின் கொள்கைபரப்புச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் கீழேயும் உருப்பெற்றது.

இதனையடுத்து தமிழக ஆளுநர் எஸ். எல். குரானா சட்டசபையில்பெரும்பான்மை ஆதரவுடைய பிரிவு ஆட்சி அமைக்கமுடியும் என்றுகருத்து தெரிவித்தார்.

இதற்கமைய திருமதி ஜானகிஇராமச்சந்திரன் தமது தரப்புக்குசட்டசபையில்கூடுதல் ஆதரவு இருப்பதை ஆளுநரிடம் நிருபித்ததைத்தொடர்ந்து அவருக்கு ஆட்சி அமைக்கும் உரிமையை ஆளுநர் வழங்கினார்.

கடந்த 7ந் திகதி திருமதி இராமச்சந்திரன் தமிழகத்தின் முதலாவது பெண் முதலமைச்சராகப் பதவியேற்றார்

இப்பதவியேற்பையடுத்தே தமிழக அரசியல் விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது முதலமச்சராகவிருந்த திருமதி ஜானகி இராமச்சந்திரன் தலைமைக்கு சிரேஷ்ட அமைச்சர் ஆர். வீரப்பனும், செல்வி ஜெயலலிதாவின் தலைமைக்கு அ தி மு க வின் அரசின் நிதிய மைச்சராகவும், எம் ஜி. ஆர். மறைவையடுத்து இடைக்கால முதலமைச்சராகவுமிருந்த இராநெடுஞ்செழியனும் ஆதவுரவழங்கினர்.

இருசாராரும் வரித்துகட்டிக் கொண்டு ஒருவரையொருவர் அரசியல்ரீதியாகக் கடுமையாக விமர்சனம் செய்வதில் இறங்கினர்.

இதன் எதிரொலி கடந்த மாதம் 28ம் திகதி சட்டசபை கூடியபோது தெரிந்தது.

நம்பிக்கை வாக்கெடுப்புக்காக தமிழக சட்டசபைகடந்த மாதம் 28ல் கூடியபோது சட்ட சபையே அமளிதுமளியானது.

சட்டசபை 'யுத்தகளமாக' மாறி, சபாநாயகர் பாண்டியனும் உறுப்பினர்களும் இரத்தக்காயங்களுக்குள்ளானார்கள். இதன்விளைவு; சட்டசபைகலைப்புக்குள்ளாயிற்று.

நேற்று முன்தினம் இந்திய ராஷ்டபதியின் ஆட்சிக்குள்ளாகியிருக்கும் தமிழகத்தில் அடுத்த மூன்று மாதத்தில் தேர்தல்நடடத்தப்படும் அறிகுறிகள் காணப்படுகின்றன. இது சம்பந்தமான அறிப்பு அடுத்த சிலவாரங்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

தமிழகசட்டசபையில் வன்செயலைத்தொடர்ந்து சட்டசபை கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறலாம் என்று கடந்த சனிக்கிழமை வெளியான 'ஈழநாடு' தலைப்புச் செய்திவெளியிட்டிருந்ததுவாசகர்கள் தெரிந்ததே

## களவாடியபொருள்கள்மீட்பு

[அச்சுவேலி]

அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து களவாடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடியவர்களின் வீடுகளிலிருந்து மீட்டெடுக்கப்பட்டன

அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான பல லட்சம் ரூபா பெறுமதியான உடமைகள் களவாடப்பட்டமை தெரிந்ததே

வாகன உதிரிப்பாகங்கள் உணவுப் பொருள்கள், மரத்தளபாடங்கள், இரும்புக் கதிரைகள், மின்சார உபகரணங்கள், அலுமாரிகள், உட்பட பெரும்பாலான பல பொருள்கள் களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி தேர்தல் சிறிமா ஆர்வம்

[கொழும்பு]

ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக்கட்சிசார்பில் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா போட்டியிடுவார்.

சுதந்திரக்கட்சி சார்பில் ஜனாதிபதித்தேர்தலில்போட்டியிட கட்சி தம்மை நியமித்துள்ளதாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

தேர்தல் சட்டப்படி எதிர்வரும் டிசம்பருக்குமுன் ஜனாதிபதி தேர்தல் நடக்கும் சூழ்நிலை இருப்பதாகவும் அவர் கூறினார்.

## அகிலன் காலமானார்

(சென்னை)

பிரபல தமிழ் எழுத்தாளர் 'அகிலன்' நேற்றுக்காலை சென்னையில் காலமானார். சி. வி. அகிலாண்டன் என்று இயற்பெயரைக் கொண்ட அகிலனின் வயது 66 ஆகும்

தமிழகத்தின் முன்னணி எழுத்தாளராக விளங்கிய அகிலன் 1963-ம் ஆண்டு சாஹித்கிய மண்டலப் பரிசு பெற்றார். தொடர்ந்து 1976-ம் ஆண்டு 'ஞானபீடம்' என்ற இந்திய எழுத்தாளர்களுக்கான அதி உயர் தேசிய விருதைப் பெற்றார். இந்த விருதைப் பெற்ற முதலாவது தமிழ் எழுத்தாளர் அகிலனே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக நாவல்களையும், சரித்திர நாவல்கள் பலவற்றையும் எழுதியுள்ள அகிலன் 17 ஆண்டுகள் இந்திய வானொலிச் சேவையிலும்பணியாற்றியிருந்தார். (கி)

## கொள்ளையின் எதிரொலி: உணவுப் பொருள் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு லொறிகளில் கொண்டு வரப்படும். உணவுப் பொருள்கள் இடைவழியில் கொள்ளையடிக்கப்படுவதும், உணவுப் பொருள்களுடன் கடத்தப்படுவதுமே இந்த விலை அதிகரிப்புக்குக்காரணம் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து உணவுப் பொருளகள் யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிவரும் பல லொறிகள் பல லட்சக்கணக்கான பொருள்ாளுடன் கடத்தப்பட்டும், கொள்ளையடிக்கப்பட்டும் வருவதால் யாழ். நகரில்உள்ள பிரபல வர்த்தகர்கள் தமது தொழிலைக் கைவிடும் அபாயம் தோன்றியுள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

### பால்மா விலை அதிகரிப்பு

இதேவேளை கடந்த வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் குழந்தைகளுக்கான பால்மா வகைகளும் இரண்டு ரூபாவிலிருந்து ஆறு ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

### சவர்க்கார விலை அதிகரிப்பு

தேங்காய் எண்ணெயின் விலை இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பில் உற்பத்தியாகும் சவர்க் காரங்களினதும் உள்ளூரில்தயாரிக்கப்படும் சவர்க்காரங்களினதும் விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. (வா]

## 6 மாதங்களில் சைக்கிள் விபத்தில் 91 பேர் பலி

[கொழும்பு]

நாடு முழுவதும் கடந்த ஆண்டு ஆறு மாதங்களில் இடம்பெற்ற சைக்கிள் விபத்துக்களில் 91 பேரின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

## லொறிகள் கடத்தப்பட்டு--- உணவுப்பொருள்தொடர்ந்துகொள்ளை

[யாழ்ப்பாணம்]

வவனியாவிற்கும் மாங்குளத்திற்குமிடையில், லொறிக் கடத்தல், உணவுப்பொருள் கொள்ளை அதிகரித்து வருவதாக யாழ். வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இப்பகுதியில் நான்கு லொறிகள் கடத்தப்பட்டு, சீனி, கடலை மற்றும் உணவுப்பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக சங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது,

இக்கொள்ளை சம்பந்தமாக சங்கத்தினர் நான்கு தடவைகள் அமைதிப்படையினரிடம் புகார் செய்துள்ளனர்.

இக்கொள்ளைகள், தொடர்ந்து நீடித்தால், யர்ழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள் கொண்டுவருவது பாதிக்கப்படும் என்றும், சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மங்களகரமான திறப்புவிழா

கிருஷ்ணா ஜுவல்லறி

KRISHNA JEWELLERY

200, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



காலம்: (இன்று)

01-02-88

திங்கட்கிழமை

காலை 10-00 மணி

ஆடர் நகைகள் 22 கரட் தங்கத்தில் சிறந்தமுறையில் செய்துதரப்படும்.

உரிமையாளர்கள்:

இ. பூவிலிங்கம். க. ஜெயரட்ணசிங்கம்

சி-1959

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான முகூர்த்த பட்டு, சேலைபட்டு வேட்டி சால்வைகள் மற்றைய சகல புடவைகளும் விற்பனைக்குண்டு. கணேசன் ஸ்ரோர்ஸ், 63, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். சி-1852

வீட்டுக்குத் தேவையான நிலைக் கதவுகள் முட்டுப்படி ஜன்னல்கதவுகளும் மொட்டை நிலைக் கதவுகளும் விற்பனைக்குண்டு த. குமாரசாமி 352, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். சி-2482

புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் 5-ந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி-1960

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் வீடு ஒன்று விற்பனைக்கு அல்லது வாடகைக்குஉண்டு தொடர்பு: க. ஆதித்தன், 20, வெங்கடேஸ்வரன் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (சி-1933)

C 50, C 90 CD 50, CD 90, CD 125, MB 5, CB 50, HWAK 250 இறக்குமதி செய்யப்பட்ட றீகன்டிசன் ஹொண்டா மோட்டார்சைக்கிள்கள் பல நிறங்களில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ், 26B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி-1669

வீமன்காமம், தெல்லிப்பளையில் கடந்தவருடம் வன்செயலின்போது அழிக்கப்பட்ட தயானி இன்டஸ்ரீஸ் அமைந்திருந்த 6 பரப்புக் காணித்துண்டும் கிணற்றுடன் அதன் அருகே அமைந்திருந்த வன்செயலின் போது அழிக்கப்பட்ட வீட்டின் 4 பரப்புக் காணித்துண்டும் கிணற்றுடன் மொத்தம் 10 பரப்புக் காணி சுற்றுமதில் கட்டக் கூடிய, அத்திவாரத்துடன் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சி-1938

## தேவை

பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத மருத்துவ கலவையாளர்கள் உடனடியாகத் தேவை. பயிற்றப்படாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இருபாலரும் விண்ணப்பிக்கலாம். The Medical Centre, ஆனைக்கோட்டை. சி-1963

கற்பூரம் பைக்கிங் செய்வதற்கு பெண்பிள்ளைகள் உடன் தேவை. நேரில் வரவும். V அரியரெட்ணம், 151 (345), கோவில் வீதி, நல்லூர் குறிப்பு: நல்லூர் கோயில் பின் வீதி. சி-1931

## CLASSES

Home Visiting English Tution Combined Class Individual Class Contact: C K. Mahalingam, 18. Sivankovil Road, Thirunelvely. C-1962

## இளம்பெண் சுட்டுக்கொலை

[அச்சுவேலி]

அச்சுவேலியில் இனம்காணப்படாதவர்களால் இளம்பெண் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திருமதி சிவஞானேஸ்வரி இராசகுலசிங்கம் [வயது 38] என்பவார்.

இச் சம்பவம் அச்சுவேலி தெற்கு பிச்சுப்பத்தி என்னும் இடத்தில் இடம்பெற்றது.

## மணப்பந்தல்

உயர்குலத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞர் ஒருவருக்கு 25 வயதுக்கு உட்பட்ட படித்த அழகான பெண் தேவை. சீதனம் எதிர்பாக்கப்படும் இருநாட்களுக்குள் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; சி-1953 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-1953

## வகுப்புக்கள்

108 Brown Road, Jaffna. A/L 88 பௌதிக இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்: 2 - 2 - 88 செவ்வாய் 6-30 A M [செவ், வெள்ளி 6-30 A-M) சி-1877

வெல்டிங் வயறிங், மோட்டார் மெக்கானிசம் (செய்முறை, அறிமுறையுடன்) புதிய பிரிவுகள் ஆரம்பம்: 3 - 02 88. 9-00 a-m பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும் (பழைய மாணவர்கள் தமக்குரிய சான்றிதழ்களை வந்து பெற்றுக்கொள்ளவும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (சாந்தி தியேட்டர் அருகாமை) சி-1951

## கல்வி

A A T. C I M A, - Law Data Processing தபால் மூலம் வீட்டில் இருந்தபடியே கற்றுக் கொள்ளவும் சித்தி உத்தரவாதம். Sai Educational Trust, 37?, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-1910)

கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்றவரால் 6-ம் தரம்முதல் வாலிபர், யுவதிகளுக்கும் இலகுவான முறையில் Spoken English எழுத, வாசிக்க, பேச கற்றுததரப்படும். வீடுகளுக்குச் சென்றும் கற்பித்துக்கரப்படும் தொடர்ப: Daniel K Sabaratnam, 35/1, Rakka Lane, Jaffna. சி-1945

G. C E. (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும், இதுவரையும் சித்தி யெய்தாதவர்களுக்கும் 19 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் ஆரமப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு குறைந்த காலத்தில் கற்பிக்கப்படும் மற்றும் பாலர் வகுப்பிலிருந்து (O/L) (A/L) ற்குரிய சகல பாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி. சி-1946

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகள் சகல வித அச்சுவேலைகளும் குறித்த தவணையில் சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும் தொடர்பு: தயா அச்சகம், 138 நாவலர் வீதி, (மனோகராச் சந்தி), யாழ்ப்பாணம். சி 1891

## MATRIMONIAL

Father looks for kind hearted, good looking girl with good family background as partner for his Doctor son, aged 36 years, working in UK, with post graduate qualifications and holding permanent visa Widowed with one pleasant daughter aged 6½ years Mars in lagna Kindly contact with chart Correspondence treated confidentially and returned if not interested. Advt No C-1926, C/o Eelanadu, Jaffna. (C.1926)

## தவறிவிட்டது

414 மின்சார நிலைய வீதி திருகோணமலை இல. 492642835 V வேலுப்பிள்ளை சிவராசா என்பவருடைய அடையாளஅட்டை மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறி விட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் ஈஞ்சடி வைரவர் கோயிலடி சுதுமலை வடக்கு, மானிப்பாய், என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி-1949

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்

1. உடலமைப்பியல் பேராசிரியர்
2. மருந்தியல் (ஃபார்மக்கொலொஜி பேராசிரியர்
3. மருத்துவப் பேராசிரியர்
4. ஒன்கொலொஜி பேராசிரியர் (அறக்கொடைத் தவிசு என்டோமென்ற்)
5. எலும்பு முறிவு அறுவைச் சிகிச்சையில்(ஓர்தோபெடிக் சேர்ஜரி) [அறக்கொடைத் தவிசு - என்டோமென்ற்]
6. நோயியல் (பத்தோலொஜி ஒட்டுண்ணியியல் / நுண்ணுயிரியல்/ உடற்றொழியியல் / உளநோயியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம் / அறுவைச் சிகிச்சையியல் (சேர்ஜரி) / உயிர் இராசாயனவியல் ஆகியவறறில் சிரேட்ட விரிவரையாளர் / விரிவுரையாளர்.
7. நோயியல் (பத்தோலொஜி ஒட்டுண்ணியியல் / நுண்ணுயிரியல் /உடற்றொழிலியல் / உளநோயியல் / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம் / அறுவைச் சிகிச்சையியல் (சேர்ஜரி) / உடலமைப்பியல் / உயிர் இரசாயனவியல் ஆகியனவற்றில் தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்/ தற்காலிக விரிவுரையாளர்
8. உடலமைப்பியல் / உடற்றொழிலியல்/ஒட்டுண்ணியியல் நுண்ணுயிரியல் / உயிர் இரசாயனவியல் ஆகியவற்றில் உதவி விரிவுரையாளர்/தற்காலிக உதவி விரிவுரையாளர்.

அறக்கொடைத் தவிசுப் பேராசிரியர். பேராசிரியர் பதவிகளுக்கான முடிவுத் திகதி: 31-03-1988

ஏனைய பதவிகளுக்கான முடிவு திகதி:29-02-1988

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் பேராசிரியர் பதவிக்கானவிண்ணப்பப் படிவத்திற்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1-50 சதமுத்திரை ஒட்டப்பெற்ற 23×10 ச. மீட்டர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு 23x10 ச மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையும் அனுப்பப்பட வேண்டும்.

அரசாங்கத் திணைக்களம், அரசகூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

எ-2481

## 90-ம் நாள் நினைவஞ்சலி



பொன்னுத்துரை வாமதேவன்
வாமன்)
அன்னையின் மடியில்: 22-01-1946
இறைவன் அடியில்: 04-11-1987

பன்னீராண்டு காலம் ஓமானில் வேலை செய்து பின் சொந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருந்த வேளை அகால மரணமடைந்த என் அன்பு மகனே! குடும்பத்தின் ஒளிவிளக்காயிருந்து எங்களை எல்லாம் அன்பினால் எவ்வித துன்பங்களும் அணுகாமல் வாழ வைத்த அன்புத்தெய்வமே! மலைபோல் துன்பம் வந்தாலும் நிலைகலங்காத எம் நெஞ்சம் உங்கள் இழப்பால் நிலைகுலைந்து சிறகொடிந்த பறவை போல் இருக்கின்றது. எமக்கு எந்த ஆறுதல் வார்த்தைகள்கூறினாலும் ஈடுசெய்ய முடியாத ஒரு இழப்பாகும் உன்தன் கனிவான பேச்சையும் களங்கமில்லாதமுகத்தையும் காணமல் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்ற எம் அன்புத் தெய்வமே! நின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, தந்தையின் முகம்காணு தனயன் (நேரு, அம்மா, அண்ணன்மார், தம்பிமார், தங்கைகள், மைத்துனர்கள், மாமன், மாமி.

வீமன்காமம்,
தெல்லிப்பளை. (எ 2481)

## 90-ம் நாள் நினைவஞ்சலி!



பீற்றர் தேவசுரேந்திரன்
[சுரேன்]
அன்னைமடியில்
அன்பு மலர்வு: 20-08-1959
இறைவன் அடியில்
அகாலஉதிர்வு: 04-11-1987

ஐந்து ஆண்டு காலம் ஓமானில் வேலை செய்து விடுமுறையில் வீடு வந்த வேளையில் அகால மரணமடைந்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற எம் அன்புத்தெய்வமே! மகனே சுரேன்! அகல் விளக்காய் ஒளி வீசிய நம் இல்லம் நீ இல்லாமல் இருளடைந்து விட்டதடா. நீ கதைத்து சிரித்தவை எல்லாம் மகனே! எம் காதுகளில் தினமும் இனிக்குதடா இறுதியாக நீ கூறிச் சென்ற வார்த்தைகள் தினமும் காதுகளில் ஒலித்து எங்களை வாட்டுதடா கர்த்தரின் விண்ணுலகில் நித்தியமாய் ஆறுதல் நீ காண்பாயடா. உன் பிரிவை நினைந்து நினைந்து துயருறும் நாம் உன் ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம். அன்பே உருவான உன்னைப் பிரிந்து வாடும்:

அன்பு அம்மா, பெரியம்மா, ஆசையம்மா, சின்னம்மா, அக்கா, அத்தான், அண்ணன்மார், தம்பி, தங்கை, மைத்துனன், மற்றும் உறவினர்கள்.

வீமன்காமம்,
தெல்லிப்பளை. (எ 2480)

## யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழக அறிவித்தல்

இந்நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் தொழில் ஆங்கில வகுப்புக்கள் யாவும் 1988-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ம், 7ம் திகதிகளில் மீண்டும் ஆரம்பமாகின்றன. இப்பாட நெறியைப் பயிலும் மாணவர்கள் தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ந. மகாதேவன்,
உதவிப்பணிப்பாளர்.

(சி 1947)

## UDUVIL GIRLS' COLLEGE

(DEPT OF FURTHER EDUCATION)

### பயிற்சி நெறிகள்

9-00 a. m. 2-00 p. m.

Diploma Course in Home Science Short-hand & Typewriting (Pitman).

Computer Course.

National Certificate in English (Pitman London & Sri Lanka)

Word Processing - [PITMAN].

வதிவிட வசதிகள் உண்டு. பிற்போடப்பட்ட PITMAN பரீட்சைகள் ஏப்ரல் மாதம் நடைபெறும். நேரடியாக விபரங்கட்குத் தொடர்பு கொள்ளவும்.

Miss. R J MANN,
(DIRECTRESS).

C-1957

# எம். ஜி. ஆர். சிலை திறப்பு விழா

## பெருவள்ளலின் ஐம்பெரும் நற்பண்புகள்!



மூன்றெழுத்து மன்னன் எம். ஜி. ஆர்.

### தாய்

தன்னை பெற்ற தாய், தான் பிறந்த பொன்னாடு தாய் மொழியாம் தமிழ், மீதும் அசைக்கமுடியாத பிரிக்கமுடியாத பற்றும் பாசமும் கொண்டவர் எம். ஜி. ஆர். அதனால் தான் தமிழகத்து தாய்மார்கள் எல்லாம் அவர் பக்கம் இருக்கிறார்கள். அவர் எங்கள் பிள்ளை. எங்கள் வீட்டுக்குப் பிள்ளை என்று தன்வீட்டுபிள்ளை மாதிரி கொண்டாடுகிறார்கள் தமிழகத்தின் தேர்தல்களில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் பொறுப்பு தமிழக தாய்மார்களின் கையில் தான் இருக்கிறது. அந்த தாய் குலம் போற்ற அவர் பேசு முன் எனது அருமை தாய்க் குலமே என்று விளிக்கின்றார். தாய்க்குலம் நெஞ்சார சந்தோசம் அடைகிறார்கள்.

### தாய்நாடு

1962ம் ஆண்டு இந்திய சீன எல்லை போர் அப்பொழுது பிரதமராக இருந்த ஜவகர் லால்நேரு அவர்கள் வானொலியில் உரையாற்றுகிறார். எல்லைப் போருக்கு ஒவ்வொரு இந்தியனும உதவி செய்து நாட்டை காப்பாற்றுங்கள் என்று இந்தியாவிலேயே முதல் முதல் நாடு காக்கும் நிதிக்கு 75 ஆயிரம் ரூபாவை வாரி வழங்கிய பெருவள்ளல் எம். ஜி. ஆர். அத்துடன அவருக்கு பரிசாக கொடுத்த தங்கவாளையும நாடுகாக்கும் நிதிக்கு வழங்கி பாரி ஆனார். என்னே தாய் நாட்டுப்பற்று.

### தமிழ்மொழி

அகிம்சா மூர்த்தியான புத்த பகவானின் போதனைகளை சுமந்து வாழும் நாடு அன்று. நாற்புறம் நலக்கடல், பரந்த காடுகள் உயர்ந்த மலைகள், சலசலத்து நீண்டுவளைந்து ஓடும் நதிகள், பச்சைப் பசேலென்றிருக்கும் சொர்க்கபூமி. வடபுலத்தே தமிழ் மன்னன் சங்கிலியம் கூட்டு இராச்சியம் தமிழ்மன்னன் உக்கிரம ராஜசிங்கனும் ஆண்ட சரித்திரபூமி இது இந்த பூமியில் தான் சிறுத்தைகளும், வேங்கைகளும் வாழ்ந்தன உழைக்கும் வர்க்கம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற உழைத்து, களைத்து ஓடாகி நிற்கின்ற உழைக்கும் கூட்டத்தின் மத்தியில் பிறந்த காரணத்தால் தான், பிறந்த நாட்டுமக்கள் தன் மக்கள், தமிழ் மக்கள், தமிழ் உரிமை, மொழியுரிமை, மாநில உரிமை, கல்வி உரிமை, தொழில் உரிமை, சகலதும் மறுக்கப்பட்டு அதன் காரணத்தால் போராட்டம் நடத்திய போது அவர்களுக்கு ஆதரவாக, தெரிந்தும் தெரியாமலும் ஆட்சி நிதியிலும், கட்சி நிதியிலும், சொந்த நிதியிலும் வாரி வாரி வழங்கி தமிழ் மொழியின்பால் அவர் கொண்ட நேசத்தை வெளிப்படுத்தினர். உலகத் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர், அவர்கள் பால் வைத்திருக்கும் அன்புத் தமிழ் மொழியின்பால் அவர் வைத்த அன்புக்கும்

### மனிதாபிமானம்

தமிழ்ஈழத்தின் கிழக்குதிசையில் கடும்மழை, பயங்கரப் புயல், மக்கள் வீடுவாசல்களை இழந்து அனாதைகளாக வீதி ஓரங்களில் மரநிழல்களே இல்லாத வெட்டவெளிபொட்டல்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று அறிந்து தனது ஆட்சியின் சார்பில் 19 லட்சம் ரூபாவை மட்டுநகர் புயல் நிவாரணத்துக்கு வழங்கினார் என்றால் அவருடைய மனிதாபிமானம் எத்தகையது என்று எண்ணிப்பார்க்க உடல்சிலிர்க்கிறது உடுபிடவைகளாகவும், உணவுப் பொருட்களாகவும் வளங்கியவள்ளல் அவர் ஆனால் இப்பொருட்களை இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காமல் அம்பாறையில் பாதிக்கப்படாத தன்

[5ம் பக்கம் பார்க்க]

### தமிழ்த்தாய் வாழ்த்து

(விருத்தம்)

சிலப்பதி காரம்செய்து சேவடியில் ஆர்ப்ப ரிக்க
சிறுதுடியின் இடைமணிமே கலையதுவும்
ஒளி பரப்ப
நலந்திகழ் அகப்புறத்தில் நானூறு மணி மாமின்ன
நல்லவளை யாபதியும் மலர்க்கரம்
தனில்கு லுங்க
வலம்இடத் திருச்செவியில் குண்டல கேசி வீச
வண்டமிழின் திருநுதலில் திருக்குறள்
திலகம் மின்ன
பலம்மிகும் கருணையன்பின் பைந்தமிழ்
யாழை மீட்டப்
பணிந்திடுவோம் தமிழ்த்தாயைப்
பல்லாண்டு வாழி! வாழி!!

"சுபம்"

"இயலிசைவாரிதி"
"கவிமாமணி"
"ஸாஹித்யஸாகரம்,"
யாழ்ப்பாணம் என். வீரமணிஐயர்.

உலகத் தமிழர் தலைவர் எம். ஜி. ஆர். சிலை திறப்பு விழா நிகழ்ச்சி சிறப்புற

- எங்கள் நல்வாழ்த்துக்கள் -

# நியு லலிதா ஜுவல்லர்ஸ்,

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 24846

# எஸ். சின்னத்துரை அன் பிறதர்,

39, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

பயணிகள் செல்லும் "ரோயோரோ கயஸ்" மோட்டார் ரதம் [Mini Bus' 30 சிறீ 5132 விற்பனைக்கு உண்டு. ஓடக்கூடிய நிலையில் உள்ளது என்ஜின் திருத்தி அமைக்கப்பட்டு புதுநிலையல் உள்ளது. புததம் புதிய பற்றறி. வேண்டு ரும்பியோர் பதிவுத்தபால் மூலமோ அல்லது இக்காரியாலயத்தில் நேரில் கடிதம் கொடுத்தோ தமது விண்ணப்பத்தை 15-2-88 மாலை 4 00 மணிக்குமுன் எமக்கு கிடைக்கத் தகுந்ததாக விண்ணப்பிக்கவும். வாகனத்தைப் பார்க்க விரும்பின் முன் அறிவித்தலுடன் எந்த நாளிலும் காலை 9-00 மணிதொடக்கம் மாலை 3-00 மணிக்குமுன் இல 28, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி என்னும் விலாசத்தில் பார்வையிடலாம்.

கௌ. காரியதரிசி
ஆளுநர் சபை,

**வட இலங்கை மருத்துவ கல்லூரி,**
நிர்வாக கட்டிடம்
164, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். [எ-2469]



## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா:

1. DRIVERS [றைவர்ஸ்]
2. CLENERS MALE [கிளீனேர்ஸ் ஆண்கள்]
3. LADY CLENERS [பெண் கிளீனர்ஸ்]
4. PLUMPERS [பைப் வேலை ஆட்கள்]

### குவைற்:

1. குவைற் ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்
HOSPITAL CLEANERS

மேற்குறிப்பிட்டோர்க்கு உடன் பிரயாண ஒழுங்குகள் செய்துதரப்படும். முழுவிபரத்துடன் எங்கள் முகவர் நிலையத்தை தொடர்புகொண்டால் சகலதும் அறியக்கூடியதாக இருக்கும். யாவரும் உடன்தொடர்பு கொள்ளவும் மற்றும் குவைத், சிங்கப்பூர், அபுதாபி நாட்டிற்கு பணிப்பெண்களாக போகவிரும்புவோரும் தொடர்புகொள்ளவும், அவர்களுக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்துதரப்படும்.

**T. V. Travels & Tourist**
Brown Road,
(Kokuvil Railway Station Front)
Kokuvil.

மு: கு. முற்பணம் அறவிடப்படமாட்டாது. சகல ஒழுங்குகளும் செய்தபின் செலவுத் தொகையை நாம் பெற்றுக்கொள்வோம்.
[சி-1928]



## சேவ்ரி ரவல்ஸ்

### நீடிப்பு சேவை

தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டும் கொழும்பு பிரயாணிகளின் நன்மை கருதியும் எமது

**யாழ் — கொழும்பு சேவை**
**வட்டுக்கோட்டை, மூளாய், சங்கானை, மானிப்பாய்**
ஆகிய பாதைகளினூடாக மீண்டும்
**01-02-1988 முதல் ஆரம்பமாகிவிட்டது**
என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்

உங்கள் ஆசனங்களை பின்வரும் நிலையங்களில் முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்:

★ சேவ்ரி ரவல்ஸ் காரியாலயம்
102, 3ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். தொ. பே: 2742

★ சேகர் மோட்டோர்ஸ்
118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ ராஜா புக்கிங் சென்ரர்
ராஜா படமாளிகை கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ சேவ்ரி ரவல்ஸ் கிளை காரியாலயம்
பிரதான வீதி, சங்கானை.

★ ரட்ணம் பார்மஸி அன்ட் குரோசரி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் தொ. பே: 22769.

**சேவ்ரி ரவல்ஸ் ஸ்தாபனத்தார்**
[எ-2489]


## மருந்து தட்டுப்பாடு

(பலாலி)

சுன்னாகம் மத்திய மருந்தகத்தில் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

## சீரான உணவுப் பொருள் விநியோகம்

பலாலி)

தெல்லிப்பழை, சுன்னாகம் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சீரான முறையில் உணவுப் பொருள்களை விநியோகிக்க ஆரம்பித்துள்ளன.

கடந்த வருடம் இறுதிப்பகுதியில் மேற்படி கூட்டுறவுச் சங்கங்கள் பங்கீட்டு முறையிலே தமது பாவனையாளருக்கு உணவுப் பொருள்களை விநியோகித்து வந்தன.

தற்பொழுது கட்டுப்பாட்டு விலையுடன் தேவையான அளவு உணவுப் பொருள்களைப் பாவனையாளருக்கு விநியோகித்து வருகின்றன.

## அச்சுவேலியில் நிவாரண உணவு

[அச்சுவேலி]

பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசு வழங்கும் நிவாரண உணவுப் பொருள்கள் அச்சுவேலி ப. நோ. கூ சங்கப்பகுதியில் பெப்ரவரி முதல் வாரத்திலிருந்து வழங்கப்படுமென தெரியவருகிறது

அரிசி, மா, சீனி, லக்ஸ்பிறே ஆகிய நான்கு பொருட்களும் நிவாரண உணவுப் பொருள்களாக குடும்ப அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் பொதுமக்கள் உணவுப் பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக கிராமசேவையாளர்கள் "பொருட்களின் பெறுமதிச் சீட்டுக்களை", வழங்கி வருகின்றனர்.

## அரியாலை மகாமாரி அம்மன் குப் பாபிஷேகம்

உலகில் உயிர்போல் உலகெங்கும் நிறைந்து விளங்கி உலகைமே வாழவைம்பவள் மகாமாரி ஆம்பாள். அவள் உறையும் திருத்தலங்களிலே தொன்மையும் சிறப்பும் கொண்டது மகாமாரிஅம்மன் ஆலயமாகும்

தமிழ்மொழிக்கும், சைவ சமயத்துக்கும் அயராதுழைத்தவர் ஆறுமுகநாவலர் பெருமான். இவர் நல்லூரிலிருந்து தற்போதைய நாவலர் வீதியால் நடந்து சென்ற சந்தர்ப்பங்களில் மாம்பழம் சந்தியைத் தாண்டி, பின் கண்டி வீதியைக் குறுக்கறுத்து இலந்தைக்குளம் வீதியின் கால் மைல் தூரத்தில் அமைந்திருக்கும் இவ்வாலயத்தில் தொண்டாற்றியும் அங்கு வளர்ந்தோங்கி நிற்கும் மருத மரங்களின் நிழலில் சிறிது இளைப்பாறியபின் தொண்டுகளைச் செய்தவர் என்பது அறிய முடிகின்றது,

தனியொருவரின் நிர்வாகத்தில் இருந்த இவ்வாலயத்தை இவ்வூரார் பாரமேற்று, ஒரு பரிபாலன சபையை அமைத்து கோயிலைச் சிறப்பாக நிர்வகிக்கின்றனர். சென்ற ஆண்டு நிகழ்ந்த குழப்பங்களின்பின் பெப்ரவரி 2-ந் திகதி புனர்பூச நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய திங்கட்கிழமை காலை புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது,

— அடியார்

## நயினாதீவு - குறிகாட்டுவான் இருநேர படகு சேவை!

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு - குறிகாட்டுவான் படகுச் சேவை, கடந்த சில மாதங்களாக மட்டுப்படுத்தப்பட்ட சேவையாகவே நடைபெற்றுவந்தமையினால் நயினாதீவுக்கு வந்து செல்லும் யாத்திரீகர்களும், மற்றும் பிரயாணிகளும் பல கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியேற்பட்டது.

இதனையடுத்து நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவல் சபையினர் எடுத்த முயற்சியினால் தினமும் இரண்டு படகுச் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன

இதன்படி தினமும் நயினாதீவில் இருந்து காலை8-00மணிக்கும் மாலை 2-00 மணிக்கும் புங்குடுதீவு' குறிகட்டுவான் துறைமுகத்திற்கும். காலை 9-30 மணிக்கும் மாலை 3-00 மணிக்கும் குறிகட்டுவான் துறைமுகத்தில் இருந்து நயினாதீவிற்கும் படகுச்சேவை விரைவில் நடைபெறும்.

## 'அசம்பாவித' சம்பவத்தின் போது இறந்தவர், காயமடைந்தவர் விபரம் பதிவு செய்யலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களினால் இறந்தவர்களில் மூன்னூறுக்கு மதிகமானவர்களின் பெயர் விபரங்கள் இறந்தவர்களினது உறவினர்களினால் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன

இறந்தவர்களின் விபரம் பதிவு செய்யப்பட்டு வருவதுடன் காயமடைந்தவர்களின் விபரமும் பதிவுசெய்யப்பட்டுவருவதாக இந்நிறுவன அதிகாரி தெரிவித்தார்.

இறந்தவர்களின் காயமடைந்தவர்களினதும் விபரங்களைச் சமர்ப்பிக்கும்போது சத்தியக் கடதாசியும் சமர்பிக்க வேண்டும். (ஓ)

## யாழ் - கிளிநொச்சி மினிபஸ் கட்டணம்குறைப்பு

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத்தின் யாழ் — கிளிநொச்சிபஞ்சாயத்துச்சபை போக்குவரத்துக் கட்டணத்தைக் குறைத்துள்ளது

யாழ்ப்பாணம் கிளிநொச்சி ரூ. 1[illegible], பரந்தன் ரூ 15, ஆனையிறவு ரூ 13, இயக்கச்சி ரூ 12, பளை ரூ. 10, எழுதுமட்டுவாள் ரூ 9, மிருசுவில் ரு 8, கொடிகாமம் ரூ. 7, சாவகச்சேரி ரூ 5.

கிளிநொச்சி - யாழ்ப்பாணம் ரூ. 15, சாவகச்சேரி ரூ. 13, கொடிகாமம் ரூ. 12, மிருசுவில் ரூ. 10, எழுதுமட்டுவாள் ரூ. 9, பளை ரூ. 8, புதுக்காடு ரூ. [illegible], இயக்கச்சி ரூ. 5, ஆனையிறவு ரூ. 4, (வ.ர)

## புதைந்துகிடந்த 'ஷெல்' மூவரைப் பலிகொண்டது!

[அலுவலக நிருபர்]

சில மாதங்களுக்கு முன் ஏவப்பட்டு, பனங்காணிக்குள் புதைந்து கிடந்த 'ஷெல்' ஒன்று மூவரைப் பலிகொண்டது

வட்டுக்கோட்டை மேற்கு அரசடியில் நேற்று முன்தினம் இப்பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

நவராஜா பத்மராஜா 45 வயது), சிதம்பரநாதன் கைலைவாசன் (5 வயது) ஆகிய இருவரும் ஸ்தலத்திலே பலியானார்கள். நடராசா இரத்தினகுமார் (18 வயது) என்பவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இவர் சத்திர சிகிச்சையின் பின்னர் நேற்று மரணமானார். (மா)

## மக்கள் புகார்

(பலாலி)

வலிகாமம் வடக்குப் பகுதியில் 'கசிப்பு' வடிப்பு அதிகரித்துள்ளதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.


## A/L 88
### Day Class

Che — 7 - 30
Bot — 8 - 30
Zoo — 9 - 30
App / Pure — 8 - 30
Phy — 11 - 30

தனித்துவம் மிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

சகல பாடங்களும் புதிய அலகுகளுடன் ஆரம்பம் (இன்று)

EDUCATION IS WEALTH — KONDAVIL

**நிரு டியூசன் சென்ரர்**
கோண்டாவில்.

எ-2486

யாழ். மத்திய கல்லூரி

## ஆண்டு 6, 7 வகுப்புகளுக்கு

## அனுமதிப்பரீட்சை

மேற்படி பரீட்சை 07-2-88 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும். விண்ணப்பித்தவர்ளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்காவிடின் கல்லூரி அலுவலகத்துடன் 5 2-88க்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

வே பாலசுந்தரம்
யாழ். மத்திய கல்லூரி. அதிபர்.
[ஏ 2483]

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரபவ ஆண்டு தைத்திங்கள் 24ம் திகதி (7-2-88) ஞாயிற்றுக்கிழமை பகல் 11-00 மணி தொடக்கம் 1-00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

மணமகன்
திருநிறைசெல்வன்
T சண்முகராசா
B Sc. Eng (Ceylon)
M Sc Eng (Bangkok
Project Engineer
New Parliament House
Canbera, Australia
அவர்களுக்கும்

மணமகள்
திருநிறைசெல்வி
இ. குமுதினி
(யாழ் மருத்துவபீடம்
4-ம் ஆண்டு)
அவர்களுக்கும்

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் திருமணம் நிகழ திருவருள் பாலித்திருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்பச்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்,

பிரத்தியேக அழைப்புகள் இல்லை

T தம்பிராசா,
1-ம், பிரிவு,
பெரியகல்லாறு.

S. இராசரத்தினம்,
D. O. A.
(உள்ளூராட்சித் திணைக்களம்),
251, பருத்தித்துறை வீதி,
சங்கிலித்தோப்பு, நல்லூர்.

(சி 1942)

### பெருவள்ளலின்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இனமக்களுக்கு வழங்கியது குறிப்பிடத்தக்கது.]

அந்த மனிதாபிமானி 1977ம் ஆண்டு இந்தநாட்டில் இனக் கலவரம் ஏற்பட்டபோது இலங்கை அரசை அவர்சாடத் தவறவில்லை. அந்தநேரத்தில் ஈழத்தின்போராளிகளுக்கு சகல வழிகளிலும் தமிழகத்தில் வைத்து உதவிகளை வழங்கினார். இனஒடுக்கலின் உச்சகட்டமாகிய 1983ம் ஆண்டுக்குப்பிறகுதான் எம் ஜி ஆர். அவர்கள் ஈழத்தமிழினத்துக்கு என்ன என்ன உதவிகள் தேவையோ எதை எதை செய்ய முடியுமோ அத்தனை உதவிகளையும் இந்தியப் பேரரசின் அனுமதியுடன் அவர செய்யத் தவறவில்லை. ஏனெனில் அவர் தன் ஆட்சிவரப்பிற்கு உட்பட்ட இந்திய மாநிலம் ஒன்றின் முதல்வர், எனவே மனிதர், பால் அவர் கொண்டிருந்தமனிதாபிமானம் இங்கே வெளிப்படுகிறது.

### மனிதநேயம்

பள்ளி மாணவனாக கும்பகோணத்தில் வாழ்ந்த நாட்களில் வறுமையின் கொடுமையால் பசியோடு பள்ளிக்கு போகமுடியவில்லையே. பாடசாலை சென்று பாடம் படிக்க முடியவில்லையே என்று வாழ்நாள் பூராகவும் தன்மன வேதனையை அவர் மறக்கவில்லை. வீட்டில் பசி. பட்டினி இதை தவிர்க்க சிறுவயதிலே, இளம்பராயத்திலே தொழிலுக்கு போக வேண்டி நேர்ந்த அனுபவத்தை அவர் தன் வாழ்நாளில் மறக்கவில்லை.

அவர் தாய் அவர்களுக்காக பட்ட துன்பம், துயரம் தரும் சம்பவங்களை அவர் மறக்கவில்லை, மனதை விட்டு அகலவில்லை, இந்த நிகழ்வு தமிழ் நாட்டு குழந்தைகளுக்கும் ஏற்படக்கூடாது எனபதற்காக என் அன்னை சிறுவயதில் எனக்கும் என் அண்ணனுக்கும் ஒரு கவளம்சோறு தரமுடியவில்லையே என கதறிய நாட்களை நான் நினைத்துப்பார்க்கிறேன். பசியின் கொடுமைஎனக்குத் தெரியும். பசியின் கொடுமையால் நான் பாடசாலைக்கு சென்று படிக்கமுடியாமல் போனதை அனுபவ ரீதியாக நான் உணர்ந்தவன். அப்படி நான் பட்ட துன்பமும் எனது அன்னைபட்ட வேதனைகளும் தமிழ்நாட்டில் எந்தத்தாயும் படக்கூடாதுஎன்றுநான்நினைக்கிறேன் என்றுசொல்லி 67 லட்சம் ஏழை பிள்ளைகளுக்கு சத்துணவு கொடுத்து பாடசாலைக்கு செல்ல வழிவகுத் ஒருமனிதநேயம் உள்ளவரை யார்தான் மறக்கமுடியும்.

### எம் ஜி.ஆரை

(1-ம பக்கத் தொடர்ச்சி)

ஆற்றியதன்நிகரற்ற சேவையை கருத்தில்கொண்டு தமிம் மக்கள் சார்பில் அவருக்குஅளிக்கு நன்றிக்கடனாகம் மேற்படி சிலை இன்று திரை நீக்கம் செய்யப்படுகின்றது

தமிழ்இதயங்கள் அனைத்தையும் கொள்ளை கொண்டு உலகில் தனக்கென ஓர் இடம் பிடித்த 'பொன்மனச் செம்மல்' எம். ஜி ஆருக்கு இன்று ஊருநகரில் திறக்கப்படும் சிலையே, அமரரின் மறைவை அடுத்து திறக்கப்படும் முதலாவது சிலையாகும்.

இலங்கை அ. இ. தி. க. தலைவர் பொன் மதிமுகராஜா தலைமையில் இன்று காலை நடைபெறும் மேற்படி சிலை திறப்புவிழா நிகழ்ச்சியில் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் சீ. வீ. கே. சிவஞானம் சிலையை திரைநீக்கம் செய்து வைப்பார்.

அதைத்தொடர்ந்து பலர் சிறப்புரையாற்றுவார்கள்.

### ஆதீனமுதல்வர் செய்தி

எம். ஜி. ஆர். சிலைதிறப்பு விழாவையொட்டி, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய ஸ்வாமிகள் 'ஈழநாடு' க்குஅனுப்பிவைத்த செய்தியில்

"புரட்சித்தலைவர் பொன் மனச்செம்மல், மக்கள் திலகம் டாக்டர் எம் ஜி ராமச்சந்திரன் அவர்களின் மறைவு தமிழ் உலகில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் தம் அன்னையையே தெய்வமாக வழிபட்ட இம்மாபெரும் திராவிடத்தலைவரை அறியாதார் இவ்வுலகில் இல்லை எனலாம் அன்னாரின் ஜீவாத்மா இறைசார்ந்து நிரதிசய நித்தியானந்த சாந்தி எ தவேண்டுமென உளமாரப்பிராத்திப்போமாக ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

அவரை கௌரவித்து இங்கு சிலை எழுப்புவது மிகவும் பொருத்தமாகும்

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

[சாந்தித் தியேட்டர் அருகு]

ஆண்டுகள்; 6, 7, 8, 9, 10,
G. C E. (O/L) 1988 Dec.
Spoken English Short-Hand and Typing [தமிழ், ஆங்கிலம்]

ஆரம்பம்: 03-02-88
G. C. E. [A/L] 1988-89
கணக்கியல் Mr. யோகராஜா.

சி-1950 03-02-88 9-00 a. m.

# இன்று மங்களகரமான திறப்பு விழா





அன்புடையீர்,

நிகழும் பிரபவ வருடம் தைத்திங்கள் 18-ம் நாள் (1-2-88) (இன்று)
திங்கட்கிழமை முற்பகல் 11 மணி முதல் 12 மணிவரை வரும்
சுபமுகூர்த்த வேளையில்

இல. 16, பெரியகடைவீதியில் அமைந்துள்ள

# சோபனு ரெக்ஸ்ரைல்ஸ்

என்னும் ஸ்தாபனம் இலங்கை வர்த்தக வங்கி முகாமையாளர்

## செ. ராகவன் அவர்களால்

ஆரம்பித்து வைக்கப்படும்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

இன்றைய நாகரிகத்திற்கேற்ற வகையில் ஆடவர்க்குரிய சேட்டிங், சூட்டிங்,
மகளிர்க்குரிய சாறிகள், பிளவுசுகள், சிறுவர்க்கான அழகிய ரெடிமேட்வகைகள்
திருமணத்திற்கு வேண்டிய சகலவிதமான
கூறைகள், காஞ்சிபுரம், மணிப்புரி மற்றும் இந்திய சிங்கப்பூர் வெளிநாட்டு ஆடைகள் யாவையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சோபனு ரெக்ஸ்ரைல்ஸ்
ஸ்தாபனத்தார்.

சி 1961

## மணிவாக்கு

ஈட்டிகளைக்கொண்டு ஒருவன் சிம்மாசனம் அமைக்கலாம்; ஆனால் அதன்மேல் இருக்கமுடியாது.

—டீன் இங்

# உலக விவகாரங்கள்

சமாதானம் பேசுவது, உண்மையாகவே சமாதானத்திற்கு வேண்டியதைச் செய்வது ஆனால் அதே நேரத்தில் போருக்கும் தயாராயிருந்து, அதற்கு வேண்டிய ஆயத்தங்களைத் தளரவிடாமல் செய்துகொண்டே இருப்பது, சமாதானப் பேச்சினால் விரோதிகளுடைய கூட்டத்தில் பேதம் உண்டாக்கப் பார்ப்பது இவைஅனைத்தும் பழையகால ஏற்பாடுகள்.

இரண்டாவது உலகயுத்தத்தில் இதனைக் கடைப்பிடித்த ஜப்பான் என்ன செய்தது? 1941 டிசம்பரில் அமெரிக்கருடன் ஜப்பானிய தூதர்கள் சமாதானப் பேச்சு பேசி அது முறிந்த மறுகணமே ஜப்பான் 'பேர்ள்' துறைமுகத்தைத் தாக்கி அமெரிக்கருடைய கடற்படையையே தகர்த்தது.

சமாதானம் விரும்பினால் போருக்கு ரகசிய ஆயத்தம் செய்வது உண்மைக்கு ஒவ்வாத காரியமென்பதால் இன்று உலகில் பரவிவரும் 'சாந்தி' இயக்கம் இதனை நிராகரித்துவருகிறது. ஜப்பான் படுதோல்வியடைந்ததும் அந்த வஞ்சனை வழிக்கு நல்லொரு அடி.

புதிய கொள்கை- ஆயுத பலத்தைக் குறைக்கும் திட்டம், படிப்படியாக முற்றாக ஒழித்துவிடும் திட்டம் பாராட்டுக்குரியது. ஆனால் அதனிலும் தீவிரவாதம் தோல்வியைக் கொண்டுவரும். பிரிட்டனின் தொழிற்கட்சி-பெருமைக்குரிய கட்சி பிளவுபட்டிருப்பதும், அதன் தீவிர தலைவர்கள் அணு ஆயுதங்களை பிரிட்டனிடமிருந்து உடனடியாக நீக்கிவிட வேண்டுமென வாதாடுகின்றனர். இலட்சியவாதிகளின் கால்கள் நிலத்தில் நில்லாது வானிற் பறப்பது இலட்சியம் அடைய முடியாத பண்டமென்பதை விளக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கு, பிரதமர் தாட்சரின் போக்கு பிடிக்கின்றது. நியாயமான பாதுகாப்பு, இங்கிலாந்துக்கு மட்டுமல்ல ஐரோப்பாவுக்கும் வேண்டுமென்று வாதாடி சோவியத்தலைவரின் பாராட்டையே பெற்றிருக்கிறார்.

திருமதி தாட்சர் எவ்வகையிலும் ஒரு இலட்சியவாதி அல்ல; ஆனால் ஒரு சிறந்த குடும்பத்தலைவி மட்டுமல்ல குடும்பத்துக்கு அபாயமென்றால் போராட வல்ல இரும்புப்பெண் என்ற புகழையும் சோவியத் ரஷ்யா வழங்கி இருக்கிறது. காத்திராப்பிரகாரமாக பிரிட்டனின் முதற் பெண் பிரதமராக வந்த தாட்சர், ஒருதடவை சறுக்கும் சமயம் ஏற்பட்டதும் வந்தது 'போக்லந் போர்' அதன் வெற்றியுடன் மூன்று தடவை அசைக்க முடியாத. இந்த நூற்றாண்டில் மிக நீண்டகாலம் ஆட்சி புரிந்த பிரதமர் என்ற புகழையும் ஈட்டியிருக்கிறார்.

உலக சமாதானப் பயணத்தில் கடந்த டிசம்பரில் நடைபெற்ற வாஷிங்டன் உச்சிமாநாடு ஒருமுக்கிய மயிற்கல். அமெரிக்காவினது சோவியத் ரஷ்யாவினதும் கையெழுத்திட்ட ஒப்பந்தம், உல வரலாற்றிலேயே, அணுஆயுத உற்பத்தியைக் குறைக்கும் சாதனம்; இதனைத் தொடர்ந்து ஆயுதக் குறைப்பு அதிகரிக்குமென்ற நம்பிக்கை ஒளி வீசுகிறது.

இவ்வருடம் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாரென்ற பேச்சே எங்கும் கீச்சிடுகிறது. போட்டியைக் கைவிட நினைத்த குடியரசு வேட்பாளர் ஹாட் மறுபடியும் அதில் குதித்திருக்கிறார் காரணம் தம்முடைய அந்தரங்க வாழ்வை விமர்சிப்பது தவறென்றும் அப்படியானால் பழைய பெரிய ஜனாதிபதிகள் பலர் அக்குற்றத்துக்கு ஆளாவர்என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சோவியத் ரஷ்யத் தலைவர் தமது சீர்திருத்தத் திட்டத்தால் உலகின் மிக்க கவர்ச்சியுள்ள தலைவராகக் காணப்படுகிறார். கம்மியூனிசம் என்றால் வாந்தியெடுக்கவல்ல பதம் என்ற 'அலெஜி' படைத்த இலங்கைப் பிரதமர் பிரேமதாசா கோர்பச்சேவின் புதிய 'பொஸ்டிரோயிக்கா' perestroika என்ற கருத்தை வியந்து பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

இதனை நன்றாக ஆதரிக்கும் பிரதமர் இந்நாட்டின் கம்யூனிஸ்டுகள் அதனை பின்பற்ற வேண்டும் என்கிறார். வேண்டியகாலம் வந்துவிட்டால், எதிரிகள் நண்பர்களாகவும், நண்பர்கள் எதிரிகளாகவும் மாறுவது சகஜம்.

இத்தாலி பிரிட்டனையே தனது வருமானத்தால் [G N.P.] முறியடித்து முந்திவிட்டதாக பெருவிழா நடத்துகிறது.

பிரான்ஸ் ஆட்சிநடத்திய அதிபர் மிததராண்டும், பிரதமர் ஷிராக்கும் ஒருவரை ஒருவர் விவாகம் செய்ய முடியாத போதும் குடித்தனம் நடத்தினர். அதுஒரு சிறந்த ஐரோப்பியகலை இனிவரும் தேர்தலில் பிரதமர் ஷிராக் ஜனாதிபதி வேட்பாளராக நிற்க தீர்மானித்திருக்கிறார் அமெரிக்காவின் ஹாட்டை [Hart]ப் போல் மேனி மினுக்கியவர் வசம் அகப்பட்டதாகச் சொல்லப்படும் ஷிராக் அதனால் எவ்விதமும் பாதிக்கப்படவில்லை.

கொரியகுடாநாடு பிரிந்த காலம் தொட்டு அவ்விரு நாடுகளும் வெட்டுப்பகை கொத்துப்பகைநிலை வளர்ந்து வருவது கண்கூடு. வட கொரியாவின் கம்யூனிஸ்ட் ஆட்சி 'சர்வதேச பயங்கரவாதிகளில் ஒன்று' என்று றீகன்பிரகடனம் செய்திருக்கிறார். நவம்பரில் தென் கொரிய கப்பலைசுட்டு வீழ்த்தியது வடகொரியாவே என்றுகுற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

உலகில் எங்கு குழப்பம் உண்டோ அங்கு எந்தத் தரப்புக்கும் பயிற்சிபெற்ற கெரிலாப்படை அனுப்பிவைக்க வட கொரியா தயாராக விருப்பதாக அதன் எதிரிகள் பிரசாரம்செய்கின்றனர். அதில் உண்மை இருக்கலாம்என்று இங்கும் நம்புபவர் பலர். 1971ல் இங்கு நடந்த தீவிரவாதக் குழப்பத்தில் அந்த நாட்டின் தூதர்விசாரணைக்குள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று எங்கள் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா வடகொரிய ஜனாதிபதியுடன் சேர்ந்துஒரு படத்தில் காணப்படும் அன்னியொன்னியம் வேறு விடயமாக இருக்கலாம்.

தென்கொரியாவில் முதல் முதல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ரோ, ஆட்சி வகிக்க வலிமையற்றவராகக் காணப்படுகிறார். காரணம் எதிரிகள் ஆட்சேபனை தேர்தல் முறையற்றதென்ற குற்றம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருடம் அங்கு நடைபெறும் ஒலிம்பிக் போட்டி எவ்வகையிலும் குளம்பாது பார்ப்பதே இன்றைய தென்கொரியாவின் முதற் கடமை.

சோவியத் ரஷ்யாவும் அதன் சகாக்களாகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா போன்ற மிகப் பெரிய நாடுகள் பங்குபற்றுகின்றன.

வடகொரியா, இதியோப்பியா, கியூபா போன்ற மிகச்சில நாடுகளின் பகிஷ்காரம் விளையாட்டின் மகிமைக்கு பங்கம் விளைவிக்காது

மூன்று மாதம் முடங்கிக் கிடந்த நாம், இக்காலத்தில் பெரும் மாற்றங்கள் உலகில் நடந்திருக்குமென்று நினைத்தோம்.

எங்களைப்போலவே எங்கும் இழுபறி. இந்தத் தொற்றுநோய் எமது நாட்டைப் பீடிக்காது பார்த்துக்கொள்ள வேண்டும்.

சர்வாதிகாரிகளை நாடு கடத்திய பிலிப்பைன்ஸ் ஹெயிட்டி இன்னும் சமாதானநிலை பெறவில்லை. ஈரான்-ஈராக் யுத்தம் ஆண்டவன் கிருபையால் இருந்தவாறிருக்கின்றது ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படை எப்போது வெளியேறும்? தெரியுமானால் அறிவியுங்கள்

'உலகம் சுற்றி'

## மரண அறிவித்தல்

### மல்லாகம் சுப்பையா நாகமுத்து

மல்லாகத்தைச்சேர்ந்த சுப்பையா நாகமுத்து 31-01-88ல் இறைவனடி சேர்ந்தார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் யோகநாதன், காலஞ்சென்ற பத்மநாதன், சாந்திநாதன் (தொழில்நுட்ப உத்யோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம் வவனியா), யோகமலர், காலஞ்சென்ற கதிர்காமநாதன், சிவநாதன் [கனடா], சோதிநாதன்(நோர்வே) கமலநாதன், சந்திரமலர் (ஜேர்மனி) ஆகியோரின் பாசத்தந்தையும், இலட்சுமிதேவி அன்னபூரணம், சந்திரகுமாரன ஆசிரியர் மல்லாகம்மகாவித்தியாலயப் வனிதாமணி உமாராணி, மகேந்திரன் (பொறியியலாளர் மேற்கு ஜேர்மனி) ஆகியோரின் நேசமாமனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 1-02-88 காலை 10-30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்
நா. சாந்திநாதன்

சி 1967

## மரண அறிவித்தல்

### திருமதி காசிநாதர் செல்லம்மா

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் வட்டக்கச்சியில் வசித்தவருமான திருமதி காசிநாதர் செல்லம்மா 24 1-88 ஞாயிற்றுக்கிழமை வட்டக்கச்சியில் காலமாகிவிட்டார். அன்னார் காசிநாதரின் அன்பு மனைவியும், கௌரியம்மா (ஆசிரியை வட்டக்கச்சி), பவானியம்மா [ஆசிரியை மட்டுவில் வடக்கு) வீரசிங்கம் (கணக்காளர் கிளிநொச்சி கச்சேரி), சோமநாதர்(B M. C. கிளிநொச்சி)ஆகியோரின் அன்புத்தாயாரும், குமாரசாமி (ஓய்வுபெற்ற ஓவசியர் வட்டக்கச்சி), குழந்தைவேலு (அதிபர் கமலாசனி வித்தியாசாலை மட்டுவில்), தில்லைநாயகி, தவமணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். இறுதிக்கிரியைகள் 24-01-88ல் வட்டக்கச்சியில் நடைபெற்றன.

சி–1954

### திரு. ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (வெள்ளைத்தம்பி)

[இளைப்பாறிய அதிபர்]

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ் அரியாலை மேற்கு வாசியுமான ஆறுமுகம் கணபதிப்பிள்ளை 29 1-88 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் சிவகாமிப்பிள்ளையின் அன்புக்கணவரும், தனபாக்கியம், சரஸ்வதி கனகலிங்கம் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊர்காவற்றுறை) ஆகியோரின் அருமைத்தந்தையாரும் காலம்சென்ற யாழ். செயலக எழுதுவினைஞர் சி. நாகேந்திரன், பொ. புவனேஸ்வரராஜா (பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் கொக்குவில் கிழக்கு), வனஜா ஆகியோரின் அன்புமாமனாரும், சந்திரவதனி, மனோகரன் [ஜேர்மனி], பாஸ்கரன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்], சாந்தவதனி, கமலவதனி, பகீரதன், பகீரதி விக்கினேஸ்வரன், விக்கினேஸ்வரி, பாஸ்கரி, துஸ்யந்தன், துஷிதா, சசிதா, பிரியதர்ஷன் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும், மனோஜாவின் அன்புப் பூட்டனாரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30 1-88 சனிக்கிழமை துண்டிமயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பொ. புவனேஸ்வரராஜா,
36, புறாடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

சி-1966

### திருமதி செபமாலை எலிசம்மா

வசாவிளான் கிழக்கை (ஒட்டகப்புலம்) பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கிளாலியில் வசித்தவருமாகிய திருமதி செபமாலை எலிசம்மா 30-ம் திகதி 6/1 மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் காலமானார். இவர் திரு. வ. ம. செபமாலையின் அன்பு மனைவியும், மரியநாயகி ஆனந்தராசா மேரிறேஸ் அமிர்தவாசகம் (ஆசிரியை சம்பத்தரிசியார் கல்லூரி), ம. ஸ்ரனி பேரின்பநாதன் [பொறியியலாளர், கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும் ச. இ. ஆனந்தராசா, பி. என். ஆர். அமிர்தவாசகம் (கடற்தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), திரேசா பேரின்பநாதன் (இந்தியா) ஆகியோரின் மாமியாரும், ஞானம்மா நீக்கிலாபிள்ளை [இளைப்பாறிய ஆசிரியை) இன் சகோதரியும், ம நீக்கிலாபிள்ளை (முன்னாள் அதிபர், யாழ். சென். சாள்ஸ் பாடசாலை) யின் மைத்துனியும், ரஜித்தமணி சேவியர் (ஜேர்மனி), ரஜித்தராணி [யாழ். ஆயர் இல்லம்], ரதி அன்ரன் [பிரான்ஸ்[, டெனீசியா, றென்கிலறாஜ் [பிரான்ஸ்], ஜெரல் ராஜ் [இந்தியா], நிர்மலராஜ் [யா/சம்பத்தரிசியார் கல்லூரி], ஜீ. ற. அமிர்தவாசகம் (கனடா), சிராணி, நிசாந்தன். நிரஞ்சன் ஷாமிலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரி. கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு மேற்படி இல்லத்திலிருந்து 2-2-88 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச. இ. ஆனந்தராஜா.
6/1, மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

(சி 1965)

### திருமதி சொர்ணலட்சுமி ஞானசேகரம்



நவாலி வடக்கைச் சேர்ந்த திருமதி சொர்ணலட்சுமி ஞானசேகரம் 22-01-1988 இறைவனடி சேர்ந்தார். தந்தை காலம்சென்ற குலசேகரம்பிள்ளை பரராஜசிங்கம் (நவாலியூர் தலைமைக்காரர்), தாயார் காலம்சென்ற வடமலைநாயகி அம்மாள், அன்புக்கணவர் காலம்சென்ற இராமலிங்கம் ஞானசேகரம் (தலைமை சிறுப்பு முதலியார் யாழ். கச்சேரி) காலம்சென்ற திருமதி விஜயலட்சுமி நல்லையா, திரு. விஜயசாரதிராஜா, திரு. இராஜகுலசேகரம், திரு. இராசவல்லவன், திரு. பரராஜசேகரம், ஆகியோரின் சகோதரியும், இளைப்பாறிய திரு வில்லவராஜசிங்கம் (Gov. Store Keeper) ஆகியோரின் அன்புச்சகோதரியும். திரு. துரைராஜசிங்கம், திரு. புஸ்பராஜசிங்கம், திரு. சொர்ணராஜசிங்கம், திரு. சண்முகராமலிங்கம் கண்ணன், திருமதி புஸ்பலக்சுமி விஸ்வநாதன், காலம்சென்ற பிள்ளை, இராசாத்தி ஞானலக்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும், இளைப்பாறிய திரு. விஸ்வநாதனின் (அரசாங்க குடியேற்ற அதிகாரி) மாமியும், செல்வி விஸ்வநாதன் சஸிகலா, செல்வன் துஸ்யந்தன், செல்வன் காண்டீபன், செல்வன் சஞ்ஜே ஆகியோரின் அம்மம்மாவும், திருமதி பாரததேவியின் அன்புமாமியும் செல்வி றஷ்மியின் அன்பு அப்பம்மாவும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-1-88 அன்று நடைபெற்றன.

நவாலி வடக்கு, மானிப்பாய்.

[சி-1955]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1988-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu P.O Box No:49. Telegram, Eelanadu, Telephone: 22389, 24126.